

* விஜயலட்சுமியின் குடும்பத்தாருக்கு உதவுவதற்கும், அவரை தேடும் நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்படியும் ஆந்திர பிரதேச பிரஜை அல்லாத தெலுங்கு சங்கத்திற்கு அதன் முதலமைச்சர் என். சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டதாகவும் டைம்ஸ் ஆஃப் இந்தியா தகவல் கூறுகிறது

* ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மீட்புப் படையினர் கடந்த ஒன்பது நாட்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் முதல் 17 மணி நேரத்திற்குப் பிறகு ஒரு ஜோடி காலணியை மட்டுமே அவர்கள் கண்டுபிடித்தனர். தவிர விஜயலட்சுமியைப் பற்றி துளியும் தடயம் கிடைக்கவில்லை. ஒன்பதாவது நாளான கடந்த சனிக்கிழமை இந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன

* அந்த சாக்கடைக் குழி முழுவதுமாக மனிதக் கழிவுகள் மற்றும் இதர குப்பைகளால் நிரம்பியுள்ளது. ஒவ்வொரு முறையும் தேடும் பணியில் உள்ளே சென்று வெளியே வரும்போது மீட்புப் பணியாளர்களுக்கு உடனடியாகக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்டனர்

கோலாலம்பூர், செப். 2-

இந்தியா, ஆந்திர பிரதேசம், சித்தூர் மாவட்டத்தின் குப்பம் எனுமிடத்தில் உள்ள அணிமிகனிபள்ளே கிராமத்தைச் சேர்ந்த 48 வயது விஜயலட்சுமி கலி மலேசியாவிற்கு சுற்றுலா மேற்கொண்டிருந்தபோது தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா நடைபாதையில் ஏற்பட்ட 8 மீட்டர் (26 அடி) ஆழ பாதாள குழியில் விழுந்து காணாமல் போன சம்பவம் நாட்டில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 23 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 8.22 மணிக்கு அங்குள்ள ஒரு கோயிலை நோக்கி சென்றுக்கொண்டிருந்த விஜயலட்சுமி, அவரின் கால் பட்டதும் திடீரென பூமிக்குள் இறங்கிய மண்ணோடு பாதாள குழியில் விழுந்தார்.

இன்றோடு சம்பவம் நடந்து 11 ஆவது நாள். அவரைத் தேடுவதற்கான மீட்புப் படையினரின் நடவடிக்கைகள் ஒன்பதாவது நாளான கடந்த சனிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது. அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து போலீசாரும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தினரும் பேச்சுவார்த்தை நடத்துவர் என்று நேற்று தெரிவிக்கப்பட்டது.






## சிங்கப்பூர் நிறுவனத்தின் இலவச உதவி நிராகரிக்கப்பட்டது ஏன்?

## வேண்டிய உதவிகளை வழங்க சந்திரபாபு நாயுடு உத்தரவு

# விஜயலட்சுமியை தேடுவதில் இனி என்ன நடக்கப்போகிறது?

## உலகமே காத்திருக்கிறது





டாங் வாங்கி போலீஸ் தலைவரான, உதவி ஆணையர் சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் இதனை உறுதிப்படுத்தியிருந்தார். அங்கு போலீசாரை நிறுத்துவதற்கான அவசியம் இனியும் இருப்பதாகத் தெரியவில்லை என்று அவர் கூறினார்.

எனினும் இச்சம்பவத்தை தொடர்ந்து மக்கள் நடமாட்டத்திற்கு கோலாலம்பூர் பாதுகாப்பானதா என்ற கேள்வி எழுந்த வண்ணம் உள்ளது. இங்கு வருகையாளர்கள் தாராளமாகச் செல்லலாம், அது பாதுகாப்பான இடம்தான் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமும், கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலேஹா முஸ்தபாவும் தெரிவித்துள்ளனர்.

தமது கணவர் மற்றும் மகனுடன் இரு மாதங்கள் மலேசியாவில் தங்கியிருந்த விஜயலட்சுமி இன்னும் ஒரு வாரத்தில் இந்தியா திரும்பவிருந்த சமயம் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு தெரிவித்தது.

விஜயலட்சுமியின் குடும்பத்தாருக்கு உதவுவதற்கும், அவரை தேடும் நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்படியும் ஆந்திர பிரதேச பிரஜை அல்லாத தெலுங்கு சங்கத்திற்கு அதன் முதலமைச்சர் என். சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டதாகவும் அந்நாளேட்டின் தகவல் கூறுகிறது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மீட்புப் படையினர் கடந்த ஒன்பது நாட்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் முதல் 17 மணி நேரத்திற்குப் பிறகு ஒரு ஜோடி காலணியை மட்டுமே அவர்கள் கண்டுபிடித்தனர். தவிர விஜயலட்சுமியைப் பற்றி துளியும் தடயம் கிடைக்கவில்லை. ஒன்பதாவது நாளான கடந்த சனிக்கிழமை இந்நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

அந்த பாதாள குழிக்குள் கழிவுகளும், குப்பைகளும், கல் பாறைகளும், கடுமையான நீரோட்டமும், நச்சு வாயுவும் மீட்புப் படையினரின் பணிகளுக்கு இடையூறாக இருந்தன. முக்குளிப்போரும் பயன்படுத்தப்பட்டனர். எனினும் விஜயலட்சுமியை கண்டுபிடிப்பதற்கான அவர்களின் முயற்சிகள் யாவும் பயனில்லாமல் போயின.

### மிகவும் ஆபத்தானது

விஜயலட்சுமிக்காக தேடும் பணியில் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஒன்பதாவது நாள் தேடுதல் பணியில், இதற்கு மேல் முக்குளிக்கும் வீரர்கள் உள்ளே செல்வது ''மிகவும் ஆபத்து'' என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவரைத் தேடும் பணியில் 110 மீட்புப் பணியாளர்கள் கடந்த ஒன்பது நட்களாகத் தீவிரமாக ஈடுபட்டனர்.



அவர்கள் அந்தக் குழி ஏற்பட்ட பகுதிக்கு அருகே இருந்த கழிவுநீர் வடிகால் வலையமைப்பு வழியாக இறங்கித் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். குழிக்குள் இறங்கிய வீரர்களில் தீயணைப்பு வீரரும் மற்றொருவர் பாதாள சாக்கடை பராமரிப்புப் பணியாளரும் அடங்குவர். அந்தக் குழிக்குள் செல்லும் பாதை குறுகியதாக இருந்ததால், அவர்களால் அசைய முடியவில்லை. நீண்டநேரம் உடலை படுத்த நிலையிலேயே வைக்க வேண்டியிருந்தது என்று மீட்புக் குழுவின் இயக்குநர் ஜெனரல் நோர் ஹிஷாம் முகமது தெரிவித்திருந்தார்.

சிமிந்தி பாறைகள் போன்று திடப்படுத்தப்பட்ட குப்பைகளை உடைப்பது சாத்தியமற்றது, இது மிகவும் கடினமான பணி. எட்டு நபர்களைக் கொண்டு கயிறுகளால் அந்த திடக் குப்பைகளைத் தகர்க்க நாங்கள் முயன்றபோதும் முடியவில்லை என்று அவர் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

முன்னதாக முக்குளிப்போர் உடையில் சாக்கடையில் இறங்கிய முக்குளிக்கும் வீரர்கள் உள்ளே ஒன்றுமே தெரியவில்லை என்றும் கனமழையுடன் போராட வேண்டியிருந்தது என்றும் கூறினர்.

''குழிக்குள் இறங்கும்போது மிகவும் பயமாக இருந்தது, ஆனால் இது உண்மையில் ஒரு தீயணைப்பு வீரரின் கடமை; நான் பயத்தை விடுத்து, பணியில் ஈடுபட வேண்டும். மற்றதை கடவுள் பார்த்து கொள்வார் என்று தீயணைப்பு வீரர் அலிமடியா புக்ரி கடந்த வாரத் தொடக்கத்தில் சினார் ஹரியானுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

அந்த சாக்கடைக் குழி முழுவதுமாக மனிதக் கழிவுகள் மற்றும் இதர குப்பைகளால் நிரம்பியுள்ளது. ஒவ்வொரு முறையும் தேடும்



பணியில் உள்ளே சென்று வெளியே வரும்போது மீட்புப் பணியாளர்கள் உடனடியாகக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்டனர்.

சம்பவம் நடந்த சிறிது நேரத்திலேயே மீட்புக் குழுவினர் அந்த குழியைச் சுற்றியுள்ள பகுதியைத் தோண்டியெடுத்தனர். அதே நேரத்தில் பிற மீட்புப் பணியாளர்கள் மோப்ப நாய்கள் மற்றும் நீரில் பயன்படுத்தக்கூடிய கேமராக்களை பயன்படுத்தினர். நிலத்துக்கு அடியில் என்ன நடக்கிறது என்பதை நன்கு உணரவும், குழியை ஆய்வு செய்யவும் ரோபோடிக் கேமராக்களும் பயன்படுத்தப்பட்டன.


உயர் அழுத்த நீர் ஜெட் இயந்திரங்கள், இரும்புக் கொக்கிகள், கயிறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கடினமான குப்பைகளை உடைக்க முயன்றுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை அன்று அதிகாரிகள் தரையில் ஊடுருவக்கூடிய ரேடார் சாதனத்தை அந்தக் குழிக்குள் செலுத்தி ஆய்வு மேற்கொண்டனர்.

அடுத்த நாள், விஜயலட்சுமியை உள்ளிழுத்த அந்தக் குழி இருக்கும் இடத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் மற்றொரு குழி தோன்றியது. மலேசிய புவியியலாளர் ஒருவர், மலேசியா கினி இணைய ஏட்டிடம் பேசுகையில், தற்போது நடைபெற்று வரும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையின் விளைவாக இந்தப் புதிய குழி உருவாகியுள்ளது என்று கூறினார்.

முதல் இரண்டு நாட்களில் தேடுதல் பணியின் முக்கியக் குறிக்கோள், விஸ்மா யாக்கின் அடியிலுள்ள கழிவுநீர் பாதைகளில் இருக்கும் 15 மீட்டர் அடைப்பை அகற்றுவதாக இருந்தது. மனிதக் கழிவுகள், டயர்கள், முடி மற்றும் திடப்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் போன்றவற்றால் அடைப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி பக்கம் 12




16ஆம் பக்கத் தொடர்ச்சி

## விஜயலட்சுமியை தேடுவதில் இனி என்ன....



### பரபரப்பான இடம் அமைதியானது

பொதுவாக சுற்றுலாப் பயணிகளின் வருகையால் பிரபலமான ஜாலான் மஸ்ஜிட் இந்தியா இச்சம்பவத்தின் காரணமாக மிகவும் அமைதியானது. இப்பகுதியில் வியாபாரம் 50 முதல் 70 விழுக்காடு வரை சரிந்ததாக கூறப்பட்டது. சிலர் கடைகளைத் திறக்கவே இல்லை.

விஜயலட்சுமி குடும்பத்தினரின் நிலையைக் கருத்தில் கொண்டு, கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்.) அதன் தேசிய தின கொண்டாட்டங்கள் ரத்து செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் மலேசியர்களிடையே அச்சத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது, திடீரென அந்தக் குழி உருவானது எப்படி என்ற கேள்வியையே பலரும் எழுப்பி வருகின்றனர். சமூக வலைத்தளங்களிலும் இது பரவலாகப் பரவி வருகிறது.

அதன் காரணத்தைக் கண்டறிய தணிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கனிமங்கள் மற்றும் புவி அறிவியல் துறையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், மனித செயல்பாடுகள் மற்றும் காலநிலை நெருக்கடியின் கலவையால் இது நடந்திருக்கலாம் என்று ஆரம்ப அவதானிப்புகள் தெரிவிப்பதாகக் கூறினார்.

### சிங்கப்பூரின் உதவியை ஏன் நாடவில்லை?

இதனிடையே, விஜயலட்சுமிக்காக மீட்கும் பணிகளில் உதவுவதற்கு சிங்கப்பூரின் கழிவு நிர்வகிப்பு நிறுவனமான ஜெட்டர்ஸ் பிரைவெட் லிமிடெட் முன்வந்தது. ஆனால் அவர்களின் நிபுணத்துவத்தை மலேசியா பயன்படுத்தாது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நீர் அழுத்தத்தின் வாயிலாக சாக்கடை கழிவுகளை அகற்றும் நடவடிக்கையில் மலேசிய மீட்புப் படையினர் இறங்கினர். இது குறித்து கருத்துரைத்த அந்த சிங்கை நிறுவனம், விஜயலட்சுமியைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் உதவுவதற்கு முன்வந்தது.

இத்துறையில் தங்களுக்கு நிபுணத்துவம் இருப்பதாகவும் இலவசமாக இந்நடவடிக்கையில் உதவ முன்வருவதாகவும் அந்நிறுவனம் கூறியிருந்தது. இதற்குத் தேவையான மிக நவீன தொழில்நுட்பம் தங்களிடம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் அந்நிறுவனத்தை மலேசியா அழைக்கவில்லை. மிகவும் சிக்கலான கால்வாய் முறைகளை ஆக்கப்பூர்வமாக சரிசெய்யும் ஆற்றல் தங்களிடம் இருப்பதாக அந்நிறுவனத்தினர் ஓர் அறிக்கையில் கூறியிருந்தனர்.

### பாதாள குழி ஏற்பட காரணம் என்ன?

பாதாள குழி என்பது பூமியில் திடீரென ஏற்படும் ஒன்றாகும். ஆனால் அது ஏற்படுவதற்கு முன்னதாக பல மாதங்கள் மண் அரிப்பு இருந்திருக்கக்கூடும். இதை சாதாரணமாக மேலோட்டத்திலிருந்து அறிய முடியாது என்பதை புவியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நிலத்தடியில் இடைவெளி அல்லது வெற்றிடம் ஏற்படுவது இதற்கு காரணமாகும். காலப்போக்கில் இந்த வெற்றிடம் பெரிதாகின்றது. பூமிக்கடியில் மண் அரிப்பு ஏற்பட்டாலும், பூமிக்கு மேலே ஒரு கூரையைப் போல அது தென்படும்.

ஆனால், நிலத்தடியில் ஏற்படும் மண் அரிப்பு காலபோக்கில் பலவீனமாகி, ஒருவரின் பாரத்தை தாங்க முடியாமல் அமிழ்ந்து விடும். அமில மழை நீர் மற்றும் நிலத்தடி மண் அரிப்பினால் நிலத்தடியில் வெற்றிடம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்த வெற்றிடம் எவ்வளவு பெரியதாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு அங்கு நீர்த்தேக்கம் அடையும். எந்த நேரத்திலும் அங்கு பாதாள குழி ஏற்படும். உதாரணமாக நிலத்தடியில் உடைந்த குழாய்களால் கூட மண் அரிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவை பழுது பார்க்கும் பணிகள் முடிந்து கடந்த ஜூலை மாதம்தான் போக்குவரத்துக்கு மீண்டும் திறக்கப்பட்டதாக தெரிய வருகிறது. விஜயலட்சுமிக்காக தேடும் பணியில் ஈடுபட்ட ஆறு முக்குளிப்போரின் கூற்றுப்படி, கடுமையான நீரோட்டம் தங்கள் பணிக்கு இடையூறாக இருந்ததாக கூறப்படுகிறது.

கழிவுக்குழாயின் ஒரு பகுதி உடைந்திருந்தது. விஜயலட்சுமி இதற்குள் விழுந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இங்கிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பந்தாய் டாலாம் சாக்கடை தொட்டியும் தேடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. விஜயலட்சுமி விவகாரத்தில் மலேசியாவின் அடுத்தக் கட்ட நடவடிக்கை என்ன என்பதை உலகம், குறிப்பாக ஆந்திர பிரதேசம் எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

